[6th August 1966

Concessions to children of evacuees

* 151 *Q*.—Sri V. SANKARAN : Will the Hon. the Chief Minister be pleased to state the facilities and concessions offered to the children of Burma and Ceylon Evacuees respectively for admission to Polytechnics and Industrial Training Institutes in the State?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : A statement[a] is placed on the table of the House.

திரு. வை. சங்கரன் : இவர்களுக்காக ஐ.டி.ஐ.-ல் 5 சத விகிதம் சீட்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. ஸ்டைபண்ட் கொடுக்கப் பட்டிருக்கிறது. ஆனால், ஒவ்வொரு பாலிடெக்னிக்கிலும் அவர் களுக்காக ஒரு சீட்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த வித்தியா சத்திற்கு அடிப்படைக் காரணம் என்ன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதிலே எது எதற்கு எப்படி உதவி அளிக்க வேண்டுமென்பதைப் பற்றி அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது.

தனியார் பஸ் உரிமம்

* *152 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து :* கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) 1964, 1965 ஆகிய ஆண்டுகளில் தனியார் பஸ் பர்மிட் உரிமைகள் மாற்றம் அனுமதிக்கப்பட்டனவா ?

(இ) ஆமெனில், மாவட்டவாரியாக எத்தனை ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) Yes.

(*b*) A statement[b] is placed on the table of the House.

திரு. து. ப. அழகமுத்து : இவ்வாறு பஸ் பர்மிட்டை மாற்று வதன் மூலமாக நல்ல லாபத்தை பஸ் முதலாளிகள் சம்பாதிக் கிறார்கள். ஆகவே, இவ்வாறு மாற்றுவதை அனுமதிப்பதில்லை என்பதைச் சர்க்கார் கொள்கையாக அறிவித்தார்கள். அப்படி இருக்கும்போது அந்த முறை இன்னும் தொடர்ந்து நடை பெறக் காரணம் என்ன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : முன்பு அரசாங்கம் எடுத்துக் கொண்ட முடிவில் ஒன்றும் முரண்பாடு இல்லை. இதெல்லாம் அப்போதைக்கப்போது பரிசீலனை செய்யப்பட்டு எந்தச் சமயத்திலே இது அனுமதிக்கப்பட வேண்டுமோ அந்தச் சமயத்தில் அனுமதிக்கப்படுகிறது. எந்தச் சமயத்தில் அனுமதி மறுக்கப்பட வேண்டுமோ அப்போது மறுக்கப்படுகிறது.

---

a Printed as Appendix I on pages 129-130

b Printed as Appendix II on page 131.